# 19

## நல்ல நண்பர்கள்



அன்று எங்கள் இஸ்லாம் பாட ஆசிரியர் ஒரு ஹதீஸை முன்வைத்து பாடத்தை ஆரம்பித்தார். நாங்கள் மிகவும் ஆர்வத்துடன் அதனைச் செவிமடுத்தோம்.

‘‘நபி முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள்: நல்ல நண்பருக்கும் கெட்ட நண்பருக்கும் உதாரணம், வாசனை(ப் பொருள்) வியாபாரிக்கும் கொல்லனுக்கும் ஒத்ததாகும். வாசனை வியாபாரி உம்மீது அதனைத் தடவி விடலாம். அல்லது அதிலிருந்து கொஞ்சம் நீர் வாங்கிக் கொள்ளலாம். அல்லது அதன் நறுமணத்தையாவது நீர் நுகரலாம். கொல்லனின் சூளையிலிருந்து வெளியாகும் தீப்பொறிகள் உனது ஆடையை எரித்துவிடலாம். அல்லது அதன் புகை உனது மூக்கைத் தொடலாம்’’.

ஹதீஸைக் கூறி முடித்த ஆசிரியர், இந்த ஹதீஸிலிருந்து நீங்கள் விளங்கிக் கொள்வதென்ன என்று வினவினார். அதற்கு,

| | | |
|---|---|---|
| ஸாதிக் | : | நல்லவர்களுடனே நாம் நட்புக் கொள்ளவேண்டும். |
| மனாஸ் | : | உலகில் நல்ல நண்பர்களும் இருப்பர்; கெட்ட நண்பர்களும் இருப்பர். |
| ஹஸ்ஸான் | : | கெட்ட நண்பர்கள் மூலம் தீமைகளே உண்டாகும். |
| மர்யம் | : | நல்ல நண்பர்களுடன் இருப்பதால் வாழ்வு மணக்கும். |
| நுஸ்கா | : | நல்ல நண்பனுக்குப் பக்கத்தில் இருந்தாலும் நற்பயனே கிடைக்கும். |
| இஷ்ரத் | : | தீய நண்பனோடு சேர்ந்து நடப்பது மட்டுமல்ல? அவர்களுக்குப் பக்கத்திலிருப்பதே ஆபத்தானதாகும். |
| முஆஸ் | : | நண்பனைத் தேர்ந்தெடுப்பதில் நாம் கவனமாய் நடக்க வேண்டும். |
| ஸப்வான் | : | நண்பர்கள் எமது வாழ்வில் செல்வாக்கு செலுத்தக் கூடியவர்கள். |

இத்தகைய எமது கருத்துக்களைச் செவிமடுத்த ஆசிரியர் எம்மைப் பாராட்டிவிட்டு மீண்டும் உரையாட ஆரம்பித்தார்.

இறை திருப்தியை நாடியே நாம் நட்புக் கொள்ள வேண்டும். உலக இலாபங்களை நோக்காகக் கொள்ளக் கூடாது. ‘‘அல்லாஹ்வுக்காக நேசம் கொள்ளும் இரு மனிதர்களுக்கு நிழலே இல்லாத அந்நாளில் நிழல் கிடைக்கும்’’ (புஹாரி) என நபி ﷺ அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். எனவே துன்பமும் துயரமும் நிறைந்த மறுமைநாளில் நல்ல நட்பு எமக்குப் பயனளிப்பதாக அமையும் என்பதை அறிந்து கொள்கின்றோம்.

நபி ﷺ அவர்கள் எப்போதும் தமது தோழர்களோடு மலர்ந்த முகத்துடன் காணப்படுவார்கள். எவரையேனும் சந்தித்தால் உடனே புன்னகைப்பார்கள். ‘‘உன்னுடைய சகோதரனின் முகத்தை நீர் புன்னகையோடு பார்ப்பது தர்மமாகும்’’ (திர்மிதி) என குறிப்பிட்டார்கள். தன் தோழர்கள் எவரேனும் பிரயாணத்திலிருந்து திரும்பினால் மகிழ்ச்சியுடன் முஆனகா (கட்டித் தழுவுதல்) செய்வார்கள். சந்தித்தால் முஸாபஹா (கைலாகு) செய்து கொள்வார்கள்.



எனவே மலர்ந்த முகத்துடன் நண்பர்களை சந்திப்பதும் ‘முஸாபஹா’ (கைலாகு) செய்வதும் ‘முஆனகா’ செய்வதும் ஸுன்னா காட்டித் தந்த வழிமுறையாகும். அது எம்மிடையே நட்புறவை பலப்படுத்தும் என்று குறிப்பிட்ட ஆசிரியர், மேலும் தொடர்ந்தார்.

‘‘உங்களில் ஒருவர் இன்னொருவர் மீது அன்பு செலுத்தினால், தான் அன்பு செலுத்துவதை அந்த நபருக்குத் தெரிவித்துக் கொள்ளவும்’’ (அஹ்மத்) என நபி ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள்.

நண்பர்கள் ஒருவரை ஒருவர் நன்கு தெரிந்து வைத்திருக்க வேண்டும். ஒருவர் செலுத்தும் அன்பையும் நட்பையும் அடுத்தவர் புரிந்துகொள்ள வேண்டும். அதற்காக, தனது தோழமையை வெளிப்படுத்த வேண்டும்.

இவை மாத்திரமல்ல, நல்ல நண்பர்களை அடிக்கடி சந்திக்க வேண்டும். அல்லாஹ்வுக்காக சந்தித்துக் கொள்ளும் நண்பர்களை அல்லாஹ் விரும்புகின்றான். மலக்குகள் அவர்களுக்காகப் பிரார்த்திக்கின்றார்கள். நண்பர்களுடன் பரிசில்களைப் பரிமாறிக் கொள்வது நட்புறவை வலுப்படுத்தும்.

''உங்களுக்குள் பரிசில்களைப் பரிமாறிக் கொள்ளுங்கள். ஏனெனில், அது அன்பை வளர்க்கும். பொறாமையை அகற்றும்'' (திர்மிதி).

நட்பு அன்பின் அடிப்படையில் அமைய வேண்டும்; கவர்ச்சியோ வெளித் தோற்றமோ அன்பின் அடிப்படையாக ஒருபோதும் அமையக் கூடாது என்று கூறி முடித்த ஆசிரியர், எம்மை விழித்து, 'நல்ல நண்பர்களுடனான உறவு மூலம் உங்களுக்குக் கிடைக்கும் பயன்கள் என்ன?' என்று கேட்டார். உடனே ஒவ்வொருவரும் பதில் சொல்ல ஆரம்பித்தோம்.

| | | |
|---|---|---|
| ஹப்ஸா | : | நல்ல நட்பு மறுமையில் எமக்குப் பயனளிக்கும். |
| ஸாபித் | : | நமது கடமைகளை நிறைவேற்ற நல்ல நண்பர்கள் துணை நிற்பார்கள். |
| ஸபிய்யா | : | நாம் தவறிழைக்கும்போது நல்ல நண்பர்கள் அதனைச் சுட்டிக்காட்டி தடுத்துவிடுவார்கள். |
| அப்ழல் | : | நல்ல நண்பர்கள் இவ்வுலகிலும் மறு உலகிலும் வெற்றிபெற வழிகாட்டுவார்கள். |
| அஹ்மத் | : | நல்ல நண்பர்கள் கற்பதற்கு உதவி செய்வார்கள். கஷ்டத்தின்போது கைகொடுப்பார்கள். |
| ஸைனப் | : | நல்ல நண்பர்கள் நல்லவற்றையே நமக்குப் போதிப்பார்கள். |
| மர்யம் | : | நல்ல நண்பர்கள் இன்பத்திலும் துன்பத்திலும் நம்மோடு இருப்பார்கள். |

எமது இக்கருத்துக்களை கரும்பலகையில் எழுதிய ஆசிரியர் எம்மை மேலும் பாராட்டினார்.

''நீங்கள் நல்ல நண்பர்களையே தேர்ந்தெடுங்கள். ஏனெனில், ஒருவன் அவனது நண்பனின் மார்க்கத்திலேதான் இருக்கிறான்'' என்று ஒரு கூற்றுண்டு என்று கூறிய ஆசிரியர் பாடத்தை முடித்துக் கொண்டார்.

**செயற்பாடு:**

நல்ல நட்பின் பயன்களைப் பட்டியற்படுத்துங்கள்.